RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 79 | மார்ச்.28 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# லாக் டவுன் பற்றி வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்: மத்திய அரசு விளக்கம்


புதுடெல்லி: மார்ச்.28-

இந்தியாவில் பொதுமுடக்கம் தொடர்பாக வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என்றும் அப்படி எந்த ஒரு திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

ஈரான் போர் காரணமாக எரிபொருட்களுக்கான பற்றாக்குறை அதிகரித்து, கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு பொதுமுடக்கம் மீண்டும் ஏற்பட இருப்பதாக சமூக ஊடகங்களில் வதந்திகள் பரப்பப்படும் நிலையில், மத்திய அரசு அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ''உலகளாவிய நிலைமை தொடர்ந்து நிலையற்றதாகவே உள்ளது. எனவே, எரிசக்தி, விநியோகச் சங்கிலிகள், அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பான களநிலவரங்களை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.






பிரதமர் மோடி தலைமையிலான நமது அரசு, குடிமக்களுக்கு எரிபொருள், எரிசக்தி, பிற அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. சவால்களை சமாளிக்க நாங்கள் முழு அளவில் தயாராக இருக்கிறோம்.

உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்வதில் இந்தியா தனது திறனை தொடர்ந்து வெளிப்படுத்தி உள்ளது. மேலும், நாங்கள் சரியான நேரத்தில், திட்டமிட்ட முறையில் ஒருங்கிணைந்து செயல்படுவோம்.

இந்தியாவில் பொதுமுடக்கம் குறித்த வதந்திகள் முற்றிலும் பொய்யானவை. இதை நான் தெளிவாகக் கூறுகிறேன். இந்திய அரசாங்கத்திடம் அத்தகைய எந்தவொரு திட்டமும் பரிசீலனையில் இல்லை. இதுபோன்ற காலங்களில் நாம் அமைதியாகவும், பொறுப்புடனும், ஒற்றுமையுடனும் இருப்பது முக்கியம். வதந்திகளைப் பரப்பி பீதியை உருவாக்கும் முயற்சிகள் பொறுப்பற்றவை மற்றும் தீங்கு விளைவிப்பவை'' என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் மோடி, "மேற்காசிய போர் காரணமாக சவாலான உலகளாவிய நிலைமை நீண்ட காலம் நீடிக்கக்கூடும். எனவே நாம், கோவிட் காலத்தை எதிர்கொண்டதுபோல் சவாலான சூழலை எதிர்கொள்ள ஒற்றுமையுடன் தயாராக இருக்க வேண்டும்'' என்று கூறியிருந்தார். இதன் பின்னர்தான் நாட்டில் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு நாடு தழுவிய பொதுமுடக்கம் (லாக்டவுன்) அறிவிக்கப்படலாம் என்ற வதந்திகள் எழுந்தன.

இந்நிலையில், மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, அதில் எவ்வித உண்மையும் இல்லை என உறுதிப்படுத்தி உள்ளார். இந்தியா வசம் 2 மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கைவசம் இருப்பதாகவும், எனவே பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் தேவையற்றது என்று மத்திய பெட்ரோலியம் அமைச்சகமும் நேற்று கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

## தென் மாவட்டங்களில் 22ல் 12 தொகுதிகளில் போட்டி அதிமுகவினர் அதிருப்தி

திருநெல்வேலி: மார்ச்.28-

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் மொத்தம் உள்ள 22 சட்டப்பேரவை தொகுதிகளில் அதிமுக 12 தொகுதிகளிலும், 7ல் பாஜகவும் போட்டியிடுகின்றன.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி போட்டியிடும் தொகுதிகள் குறித்த விவரங்களை அதிமுக பொதுச்செயலர் பழனிசாமி நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தார்.

அதில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 4 தென்மாவட்டங்களில் உள்ள 22 சட்டப்பேரவை தொகுதிகளில் அதிமுக போட்டியிடும் தொகுதிகள் வருமாறு: விளாத்திகுளம், தூத்துக்குடி, வைகுண்டம், கோவில்பட்டி, சங்கரன்கோவில், கடையநல்லூர், தென்காசி, ஆலங்குளம், திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய 12 தொகுதிகளில் அதிமுக நேரடியாக போட்டியிடுகிறது.

தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் தலா 4 தொகுதிகளிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 3 தொகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 தொகுதியிலும் அதிமுக களம் காண்கிறது.

பாஜக போட்டியிடும் தொகுதிகள் வருமாறு: ராதாபுரம், நாகர்கோவில், விளவங்கோடு, குளச்சல், பத்மநாபபுரம், திருச்செந்தூர், வாசுதேவநல்லூர். நாங்குநேரி மற்றும் ஓட்டப்பிடாரம் தொகுதிகளில் அமமுகவும், கிள்ளியூர் தொகுதியில் தமாகாவும் போட்டியிடுகின்றன.

கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய 4 தொகுதிகளிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய 6 தொகுதிகளிலும், தென்காசி மாவட்டத்தில் தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய 5 தொகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, பத்மநாபபுரம் ஆகிய 2 தொகுதிகளிலுமாக மொத்தம் 17 தொகுதிகளில் அதிமுக போட்டியிட்டிருந்தது.

இம்முறை இந்த எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. இது இந்த 4 மாவட்டங்களில் உள்ள அதிமுகவினருக்கு உற்சாக குறைவை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி தொகுதியை தவிர்த்து மற்ற 5 தொகுதிகளிலும் பாஜகவும், தமாகாவும் தாமரை சின்னத்தில் களமிறங்குகின்றன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிமுகவினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் கடந்த சட்டப்பேரவை தேர்தலில் நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு தொகுதிகளில் பாஜக போட்டியிட்டிருந்தது. அதில், நாகர்கோவில் தொகுதியில் மட்டும் எம்.ஆர். காந்தி வெற்றிபெற்றிருந்தார்.

கிள்ளியூர் தொகுதி தமாகாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த தேர்தலில் அதிமுகவுக்கு அதிக தொகுதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், தொகுதிகள் குறைக்கப்பட்டதால் அதிமுகவினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதுபோல், திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி தொகுதியை கூட்டணி கட்சியான அமமுகவுக்கு ஒதுக்கியதால் அதிருப்தி அடைந்த இத்தொகுதி முன்னாள் அதிமுக எம்எல்ஏ நாராயணன், கட்சியிலிருந்து விலகவுள்ளதாக கட்சி வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதுபோல், ராதாபுரம் தொகுதியையும் பாஜகவுக்கு விட்டுக்கொடுத்துள்ளதால் இத்தொகுதியில் எம்எல்ஏ கனவுடன் வலம்வந்த அதிமுக பிரமுகர்கள் சோர்வடைந்துள்ளனர்.



■ சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 ஐ முன்னிட்டு, பொதுமக்களிடையே 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணா சிலை பகுதியில் கல்லூரி மாணவர்களின் சார்பில் "என் வாக்கு என் உரிமை" என்ற தலைப்பின் கீழ் இடப்பட்ட விழிப்புணர்வு உப்பு கோலத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி.இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். உடன் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.செல்வகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.பழனிகுமார், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி சத்யா, வட்டாட்சியர்கள் திரு.மாணிக்கவாசகம் (திருப்பத்தூர்), திரு.நாகநாதன் (சிங்கம்புணரி) உட்பட பலர் உள்ளனர்.







## மானாமதுரை தொகுதி மக்களின் செல்லப்பிள்ளை தமிழரசி ரவிக்குமார் சாதனைகள் ஒரு பார்வை

மானாமதுரை மார்ச். 28-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகப் பணியாற்றி வரும் தமிழரசி ரவிக்குமார், அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு மக்கள் பிரதிநிதியாகத் திகழ்ந்து வருகிறார். மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சராகப் பணியாற்றிய அனுபவம் கொண்ட இவர், தற்போது மானாமதுரை தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்து வருகிறார்.

அரசியல் பயணம்



மற்றும் பின்னணி1976இல் பிறந்த தமிழரசி ரவிக்குமார், 1998 முதல் கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வருகிறார். 2006ஆம் ஆண்டு மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்று அமைச்சராகப் பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து, 2021 சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தனித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று, தற்போது அத்தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார்.

முக்கிய திட்டங்களும் சாதனைகளும்தொகுதி மக்களின் நீண்ட காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்களை இவர் செயல்படுத்தியுள்ளார்:

* கல்வி மற்றும் உள்கட்டமைப்பு: மானாமதுரைக்கு ஒரு அரசு கலைக்கல்லூரி, சிப்காட் தொழிற்பேட்டை மற்றும் மினி ஸ்டேடியம் போன்றவற்றை அமைப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளார்.

* நீர் மேலாண்மை மற்றும் போக்குவரத்து: வைகை ஆற்றில் உயர்மட்டப் பாலம், திருப்புவனம் வைகை ஆற்றுப் பாலம் மற்றும் பல்வேறு பகுதிகளில் தார்ச் சாலைகள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

* சுகாதாரம் மற்றும் பொதுச் சேவை: மானாமதுரை மற்றும் திருப்புவனம் பகுதிகளில் பிரசவ வார்டுகள், கூடுதல் மருத்துவக் கட்டடங்கள், பகுதி நேர நியாய விலைக்கடைகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் போன்றவற்றைத் திறந்து வைத்துள்ளார்.

* கீழடி அகழ்வாராய்ச்சி: தமிழர்களின் தொன்மையை உலகிற்குப் பறைசாற்றும் கீழடி அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பையும், அத்துறையின் வளர்ச்சியையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்.

மக்கள் தொடர்பு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்களின் வழிகாட்டுதலின்படி, தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, உடனடி தீர்வுகளைக் கண்டு வருகிறார். இவரது சீரிய பணியால் மானாமதுரை தொகுதி ஒரு தன்னிறைவு பெற்ற தொகுதியாக மாறி வருவதாகத் தொகுதி மக்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

## தேர்தல் ஆணைய நடவடிக்கைகளுக்கு எதிராக சென்னையில் மார்ச் 31ல் வணிகர்கள் ஆர்ப்பாட்டம்: விக்கிரமராஜா

கரூர்: மார்ச்.28-

கரூர் தனியார் ஹோட்டலில் (மார்ச் 27) தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில மாநாட்டுக்கான ஆயத்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா கூறியது: "வரும் மே 5ம் தேதி திருவாரூரில் 43வது வணிகர் எழுச்சி மாநாடு நடைபெறுகிறது. கரூர் மாவட்டத்தில் இருந்து 5,000 பேர் பங்கேற்கின்றனர்.

தேர்தலை திருவிழா என்கின்றனர். ஆனால் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததில் இருந்து வியாபாரிகளுக்கு இருண்ட காலமாகவே உள்ளது. தேர்தல் அதிகாரிகள், பறக்கும் படை என்ற பெயரிலேயே வியாபாரிகளை குறிவைத்து தாக்குதல் நடத்துகின்றனர்.

கரூரில் மார்ச் 25ம் தேதி அரிசி மூட்டை ஏற்றிச் சென்ற வாகனத்தை மடக்கி வைத்துக் கொண்டு ஆவணங்கள் முறையாக இருந்தபோதும் வாடிக்கையாளர் போன் எண் மாறியிருந்ததால் வியாபாரியிடம் ரூ.1.13 லட்சத்தை அபகரித்துவிட்டனர். வீட்டு வாசலில் நின்று வியாபாரிகளிடம் பணம் பறித்து வருகின்றனர். இது கடுமையான அத்துமீறல் என்பதை வணிகர் சங்க பேரமைப்பு வன்மையாக கண்டனத்தை பதிவு செய்து கொள்கிறோம்.

தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வியாபாரிகள் கோரிக்கையை ஏற்று அதிகத்தொகை கொண்டு செல்லக்கூடிய சூழலை உருவாக்குவோம் எனக்கறியுள்ளார். ஆனால் அவர்கள் தலைமையின் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை மூலம் வியாபாரிகளை துன்புறுத்தக்கூடாது என்பதை வலியுறுத்த வேண்டும். இந்த நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்ற காரணத்தினால் தான் வரும் மார்ச் 31ம் தேதி சென்னையில் முதற்கட்டமாக ஒரு ஆர்ப்பாட்டத்தை தொடங்கவிருக்கிறோம். இது தொடக்கம் தான், நிறைவல்ல. தீர்வு ஏற்படும் வரை பல்வேறு கட்ட போராட்டங்களை அறிவிப்போம்.

உணவு பாதுகாப்புத் துறையில் உரிமம் பெறக்கூடிய வியாபாரிகள் ஏப்.1ம் தேதி முதல் ஒரே ஒரு முறை உரிமம் பெற்றால் போதும், புதுப்பிக்க தேவையில்லை. ரூ.1.5 கோடிக்கு கீழ் வர்த்தகம் உள்ள நிறுவனம் மாநில அரசிடமும், அதற்கு மேல் உள்ள நிறுவனங்கள் மத்திய அரசிடம் உரிமம் பெற்றால் போதும் ஆயுட்கால உரிமத்தை மாநில அரசின் அழுத்தத்தினால் மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய, மாநில அரசுகளுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

தமிழக அரசுக்கு ஒரு கோரிக்கையை வலியுறுத்துகிறோம். தமிழகத்தில் உள்ள பல்வேறு உரிமங்கள் முறையை ஒற்றை சாளர முறையில் ஒரே முறை ஆயுட்கால உரிமமாக வழங்க வேண்டும். சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக, அதிமுக அனைத்து கட்சிகளிடமும் எங்கள் கோரிக்கைகளை வழங்கியுள்ளோம். யார் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறார்களோ அவர்களுக்கு ஆதரவு அளிப்பது குறித்து முடிவு செய்து அறிவிப்போம்.

உயிரை மாய்க்கும் அரசியல் கட்சி கூட்டங்களுக்கு அனுமதி தரக் கூடாது. யார் தலைமையில் கூட்டம் நடைபெறுகிறதோ அங்கு அசம்பாவிதம் நடந்தால் அந்த தலைமை தான் பொறுப்பேற்க வேண்டும். வெளியூரில் உள்ளவர்கள் இருக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நிலைப்பாட்டை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். மார்ச் 31ம் தேதி நடைபெறும் முதற்கட்ட ஆர்ப்பாட்டத்தில் அடுத்த கட்ட போராட்டம் குறித்து அறிவிப்போம். அதற்கடுத்த போராட்டம் குறித்து 2ம் கட்ட போராட்டத்தில் அறிவிப்போம். ஏப்.23ம் தேதி வரை எங்கள் போராட்டங்கள் தொடரும்.

தேவைப்படும் நிலை ஏற்பட்டால் தமிழகம் முழுவதும் கடையடைப்பு செய்யவும் தயாராக உள்ளோம். அந்த நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்றுதான் முதற்கட்டமாக மார்ச் 31ம் தேதி ஆர்ப்பாட்டம் தொடங்குகிறது'' என்று விக்கிரமராஜா கூறினார். இந்நிகழ்வில் கரூர் மாவட்ட வணிகர் சங்க செயலாளர் வெங்கட்ராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# நீலகிரி மாவட்டம் பந்தலூரில் மகளிர்களுக்கு சோப்பு தயாரிக்க பயிற்சி

நீலகிரி, மார்ச்.,28-

பந்தலூர் ஏகல் மகளிர் தையல் பயிற்சி மையத்தில் மகளிர்கள் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில், 'குளிர்முறை சோப்பு' தயாரிப்பதற்கான ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

ஆல் தி சில்ரன், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் ஆகியன சார்பில் நடைபெற்ற பயிற்சி முகாமிற்கு மகளிர் தையல் பயிற்சி மையம் ஆசிரியர் ராஜேஸ்வரி தலைமை தாங்கினார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் பயிற்சியை துவக்கி வைத்து பேசும்போது மகளிர்கள் தங்கள் வீடுகளில் அடிக்கடி பயன்படுத்தும் சோப்பு குறைந்த முதலீட்டில் வீட்டில் தயாரிக்க முடியும்.

தயாரிக்கப்பட்ட சோப்புகளை முதலில் உள்ளூர் அளவிலும் பின்னர் முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் விளம்பரபடுத்தியும் சந்தைப்படுத்த முடியும். இதன் மூலம் பெண்கள் தங்கள் இல்லங்களிலிருந்தே சிறு தொழில் தொடங்கி வருமானத்தை ஈட்டி, பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெற ஒரு வாய்ப்புகள் கிடைக்கும் என்றார்.

ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் குளியல் சோப்புகளை எளிய முறையில், குறைந்த முதலீட்டில் தரமானதாக தயாரிப்பது குறித்தும் ரசாயன கலப்பில்லாத இயற்கை மூலப்பொருட்களைக் கொண்டு சோப்பு தயாரிக்கும் முறைகள் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் பலர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்

# நீலகிரி ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புனர்வு

நீலகிரி மார்ச். 28-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புனர்வுஏற்படுத்துப் வகையில், SVEEP THE NILGIRIS DISTRICT மலையின் குரல் நம் வாக்கு என்ற செல்பி பாயிண்டில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு புகைப்படம் எடுத்துக் கொளண்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் வாக்காளர்கள் அதிகமாக கூடும் இடங்களில் இந்த செல்பிபாயிண்ட் அமைக்குமாறு அறிவுறுத்தினார்.




# வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு

நீலகிரி மார்ச். 28-

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம் துணை இயக்குநர் .M.G. கணேசன், மற்றும் K.கிருபாகரன், முதுமலை புலிகள் காப்பக மண்டல வனப்பாதுகாப்புபடை உதவி வனப்பாதுகாவலர் தலைமையில் முக்குருத்தி தேசிய பூங்கா வனச்சரகம் சார்பில் உதகை செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் கிரசன்ட் காசில் பப்ளிக் ஸ்கூல் மாணவர்களுக்கான வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு முகாம் உதகை கேர்ன்ஹில் சூழல் சுற்றுலா ஸ்தலத்தில் சூழல் மேம்பாட்டு குழுவின் அன்றாட பணிகள், முக்குருத்தி சரக வனப்பணியாளர்களின் தினசரி வனப்பாதுகப்பு ரோந்து பணிகள், வேட்டை தடுப்பு முகாம் பணிகள், வனப்பாதுகப்பில் புவி நிலை நிறுத்தும்மானி (GPS device) கம்பி யில்லா தந்தி (Wireless device) பயன்பாடு குறித்தும், வனவிலங்குகள் கணக்கெடுப்பு பணி பற்றியும் எடுத்துரைத்து வனம் சார்ந்த தகவல் பொருள் விளக்க மையம், தொங்கும் பாலம், இயற்கை காட்சி முனை, தோடர் பழங்குடியினரின் பாரம்பரிய புவிசார் குறியீடு பெற்ற தையல் வேலைப்பாடு பணி (Embroidery work) மற்றும் முத்தோரை வன நாற்றங்கால் பண்ணை ஆகிவற்றை பள்ளி ஆசிரியர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பயனடைந்தனர்






■ சூளகிரி அருகே வாகன சோதனையில் ₹1.09 லட்சம் பறிமுதல்.டி.குருபரப்பள்ளி பகுதியில் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் சோதனை மேற்கொண்டனர்.TN70T 2263 கிரெட்டா காரில் வந்த ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த ஹரிஷ்வர்மாவிடம் ஆவணமின்றி பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.பறிமுதல் செய்யப்பட்ட தொகை, உதவி தேர்தல் அலுவலரும் சூளகிரி வட்டாட்சியர் ரமேஷ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# திருவையாறு ஐயாறப்பர்கோயிலிலிருந்து நந்தியெம் பெருமான், சுயசாம்பிகை திருமணத்திற்கு ஐயாறப்பர்,அறம்வளர்த்த நாயகியுடன் கண்ணாடி பல்லக்கிலும், நந்திகேஸ்வரர் பட்டு வேஷ்டி ,சட்டை அணிந்து மாப்பிள்ளை கோலத்தில் குதிரை வாகனத்தில் புறப்பாடு

தஞ்சாவூர் மார்ச். 28-

திருவையாறு அந்தணர்குறிச்சியில் 26ம் தேதி சிலாத முனிவருக்கு திருநந்திதேவர் மகனாக ஐயாற்று பூமியில் அவதரித்தார் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன, அதனை தொடர்ந்து திருவையாறு அறம்வளர்த்தநாயகி உடனாகிய ஐயாறப்பர் கோயிலில் இரவு நந்தியம் பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும்தொடர்ந்து நந்தியம் பெருமானுக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது. 27ம் தேதி காலை 5.30 மணிக்கு ஐயாறப்பர், அறம்வளர்த்தநாயகியுடன் கண்ணாடி பல்லக்கிலும், சுயசாம்பிகை தனி பல்லக்கிலும் நந்தியம்பெருமான் பட்டுவேட்டி, பட்டுசட்டை அணிந்து மாப்பிள்ளைகோலத்தில் குதிரை வாகனத்தில் அமர்ந்து வாணவேடிக்கை இன்னிசை முழங்க திருவையாறிலிருந்து புறப்பட்டு தில்லைஸ்தானம், கடுவெளி, வைத்தியநாதன்பேட்டை வழியாக கொள்ளிடம் ஆற்றில் இறங்கி அரியலூர் மாவட்டம் திருமழப்பாடிக்கு சென்றடைந்தனர் திருமழப்பாடியில் இரவு வைத்தியநாத சுவாமி கோயிலில் நந்தியெம்பெருமானுக்கும் சுயசாம்பிகைக்கும் திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. சுற்று வட்டார கிராமங்களிலிருந்தும் வெளி மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமிதரிசனம் செய்தனர்.பின்னர் ஐயாறப்பர், அம்பாள் புறப்பட்டு திருவையாறு வந்தடைத்தனர். ஏற்பாடுகளை தருமபுர ஆதீனம் 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமா ச்சாரியா ர் சுவாமி கள் உத்தரவின் பேரில் ஐய்யாறப்பர் கோயில் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்க தம்பிரான் சுவாமிகள் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர்.



# ஜெனரேட்டர் இன்ஜினில் தலைமுடி சிக்கி படுகாயமடைந்த 5ம் வகுப்பு மாணவி சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்


தஞ்சாவூர் மார்ச்.28-

திருவையாறு அருகே கண்டியூர் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் ராஜீவ்காந்தி மகள் ரக்ஷிதா (9) கண்டியூர் அரசு தொடக்கப்பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில்

காலை 5:30 மணி அளவில் கண்டியூர் அருகே உள்ள வீரசிங்கம்பேட்டை மாரியம்மன் கோவிலுக்கு பூச்சொரிதல் விழாவிற்காக டாட்டா ஏசி வாகனத்தில் இருந்த ஓடிக்கொண்டிருந்த ஜெனரேட்டர் இஞ்சின் அருகே சோர்வாக இருந்தவரை அமர வைக்க முயன்றபோது எதிர்பாராத விதமாக அவரது தலை முடி இன்ஜினின் சிக்கியதில் தலையில் படுகாயமடைந்தார்.

உடனடியாக அவரை திருவையாறு அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதுகுறித்து நடுக்காவேரி போலீசில் ராஜீவ் காந்தி புகார் செய்தார். புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் மற்றும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கோவில் திருவிழாவிற்காக சென்ற பள்ளி மாணவி எதிர்பாராத விதமாக விபத்தில் சிக்கி உயிரிழந்ததால் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.





■ ஓபிஎஸ் ஆதரவாளரும் முன்னாள் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினருமான கோவிந்தராஜ் இன்று அதிமுக துணை பொதுச்செயலாளர் கே பி முனுசாமி தலைமையில், பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார்.ஓபிஎஸ் திமுகவிற்கு சென்றதால் அவரது ஆதரவாளரான கோவிந்தராஜ் மீண்டும் தாய் கழகமான அதிமுகவில் இணைந்தார்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி, காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றியம், எருமாம்பட்டி, பென்னேஸ்வர மடம் ஊராட்சி, கூரம்பட்டி, கொட்டவூர் கிராமத்தைச் சேர்ந்த, அதிமுக கட்சியை சேர்ந்த குமார்,முருகேசன், சக்திவேல்,ரமேஷ் குமார் ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்து கொண்டனர். மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன், மாவட்ட பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



■ 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மானாமதுரை (தனி) சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் வழக்கறிஞர் வே.பாலையா விருப்ப மனு அளித்தார்சென்னை அம்பேத்கர் திடலில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் அவர் மனுவை சமர்ப்பித்தார். இந்நிகழ்வில் சிவகங்கை தொகுதி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வெற்றிவிஜயன், மானாமதுரை தொகுதி மாவட்ட பொருளாளர் ஆதிவளவன், மாவட்ட துணைச்செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, சமூக ஊடக மைய நிர்வாகி அஜித்வளவன், ஒன்றிய துணைச்செயலாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.வே.பாலையா தற்போது மானாமதுரை தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளராக உள்ளார்.




# கிருஷ்ணகிரி தொகுதிக்கு அசோக் குமார் வேட்பாளர் அறிவிப்பு காவேரிப்பட்டினத்தில் அதிமுகவினர் கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி, மார்ச்.28-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அதிமுக தனது இரண்டாவது வேட்பாளர் பட்டியலை நேற்று வெளி யிட்டது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்கான அதிமுக வேட்பாளராக, கட்சியின் கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக் குமார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த அறி விப்பைத் தொடர்ந்து காவேரிப்பட்டினம் ஒன்றியம் மற்றும் நகர அதிமுக சார்பில் உற்சாகக் கொண்டாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பையூர் ரவி மற்றும் நகர செயலாளர் விமல் தலைமையில், பேருந்து நிலையம் அருகே பொதுமக்களுக்கும், கட்சி தொண்டர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன், முன்னாள் பால்வளத் தலைவர் குப்புசாமி, ஆறுமுகம், முன்னாள் கவுன்சிலர் கணேசன், சுந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் அதிமுக நிர்வாகிகள் விக்ரம் குமார், பெரியசாமி, சண்முகம், மதிவாணன், கணேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோவிந்தராஜ், சரவணன், கார்த்திக், அபிராமி மதனகோபால், பாலாஜி, மணி உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் பலரும் கலந்து கொண்டு, அசோக் குமார் வெற்றி பெற வேண்டும் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.






■ , இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (27.03.2026) வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஆட்டோ வாகன பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், துவக்கி வைத்து ஓட்டுநர்களுடன் செல்பி புகைப்படம் எடுத்தனர். உடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க மாவட்ட திட்ட அலுவலர் பாபு வட்டார போக்குவரத்து அலுவலர் ஆனந்த் ஆகியோர் உள்ளனர்..

# மகாவீர் ஜெயந்தி முன்னிட்டு கிருஷ்ணகிரியில் மார்ச் 31 அன்று மதுபான விற்பனைக்கு முழுத் தடை



கிருஷ்ணகிரி, மார்ச். 28-

மகாவீர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மதுபானக் கடைகள் மற்றும் அதனுடன் இணைந்த மதுக்கூடங்கள் மார்ச் 31, 2026 (செவ்வாய்க்கிழமை) அன்று முழுமையாக மூடப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச. தினேஷ் குமார் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பின்படி, 31.03.2026 அன்று காலை 10.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை, மாவட்டம் முழுவதும் உள்ள TASMAC கடைகள், பார்கள் மற்றும் FL2, FL3, FL3A, FLAA உரிமம் பெற்ற அனைத்து நிறுவனங்களிலும் மதுபானங்கள் மற்றும் பீர் வகைகள் விற்பனை செய்யவும், சேமித்து வைத்திருக்கவும், எடுத்துச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை, தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள், 1981 படி அமல்படுத்தப்படுவதாகவும், பொதுச் சமாதானம் மற்றும் சட்டம் ஒழுங்கை பேணும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், தடை உத்தரவை மீறி மதுபானங்களை விற்பனை செய்தாலோ அல்லது அனுமதியின்றி எடுத்துச் சென்றாலோ, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், பொதுமக்கள் மற்றும் வணிகர்கள் அரசு அறிவிப்பை மதித்து ஒத்துழைக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.



# பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளிகள் வெல்பேர் டிரஸ்ட் இணைந்து தேர்தல் விழிப்புணர்வு பேரணி

பம்மல் மார்ச். 28-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மலில் தமிழக சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளிகள் வெல்பேர் டிரஸ்ட் இணைந்து தேர்தல் விழிப்புணர்வு பேரணியை பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளிகள் வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் கவிதா தலைமையில் கௌரவ தலைவர் அருணகிரி, செயலாளர் தேவி முன்னிலையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கதிர்வேல் கலந்து கொண்டு இந்த பேரணியை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்

இப்பேரணியில் கிளைச் செயலாளர் குன்றத்தூர் பிரகாஷ், குரோம்பேட்டை திருநாவுக்கரசு, அனகாபுத்தூர் சரவணன், கீழப்பாக்கம் தனசேகர், சதீஷ் பாபு, சமூக ஆர்வலர் வினோத் மற்றும் உறுப்பினர்கள் மாற்றுத்திறனாளிகள் ஆண்கள் பெண்கள் உள்ளிட்ட 100க்கு மேற்பட்டோர் தேர்தல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பதாகைகள் ஏந்தி பம்மல் ஜங்ஷன் சாலையிலிருந்து பொழிச்சலூர் சாலை வழியாக ஊர்வலமாக சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார் இந்த ஊர்வலத்தின் போது அனைவரும் கட்டாயமாக வாக்கு பதிவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த ஊர்வலம் நடைபெற்றது



■ செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வட்டம், கீரப்பாக்கத்தில் வேளாண்மைத்துறை சார்பில் 03.04.2026 அன்று 2026 சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி 100 % வாக்குபதிவை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு பேரணி தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் .எஸ்.மாலதி ஹெலன், தலைமையில் நடைபெற்றது. இதில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கொண்டனர்.



■ செங்கல்பட்டு நேற்று செயின்ட் மேரீஸ் மேல்நிலைப்பள்ளியில் 23.04.2026 அன்று 2026 சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி 100 % வாக்குபதிவை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன், முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருவளர்செல்வி, செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் ரம்யா, துணை ஆட்சியர் மணியரசன் மற்றும் கல்லூரி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 அச்சகம், உணவகம் தனியார் தங்கும் விடுதி மற்றும் தனியார் மண்டபங்களின் உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம்

## மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது





தேனி மார்ச். 28-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அச்சகம், உணவகம்.

தனியார் தங்கும் விடுதி மற்றும் தனியார் மண்டபங்களின் உரிமையாளர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெறவுள்ளதையொட்டி, தேர்தல் தொடர்பான நன்னடத்தை விதிமுறைகள் 15.03.2026 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, தேர்தல் தொடர்பான விளம்பரங்கள், சுவரொட்டிகள், துண்டுபிரசுரங்கள் போன்றவற்றை அச்சடிக்கும்போது, இந்திய இறையாண்மைக்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கும் எதிராகவும், ஜாதி, மதம், இனம் போன்றவற்றின் ஒற்றுமையை குழைக்கும் வகையிலான வாசகங்கள் இடம்பெறக்கூடாது.

அச்சடிக்கக் கோருபவரின் உரிய அனுமதிக் கடிதம் பெற்று, அதற்குரிய பட்டியலுடன் பிரதிகளின் எண்ணிக்கை, அச்சிடப்படும் மாதிரி பிரதியினை அச்சடிக்கும் நிறுவனம், ஊடகச் சான்றிதழ் மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் (MCMC Committee) சமர்ப்பித்து, அச்சிடுவதற்கான அனுமதியினை பெற்று, உதவி தேர்தல் அலுவலரிடம் சமர்பித்து அச்சிட்டு வழங்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும். துண்டுப்பிரசுரங்களின் முகப்புப் பகுதியில் அச்சாளரின் முகவரி, பிரதிகளின் எண்ணிக்கை, அனுமதி எண் ஆகியவை தெளிவாக தெரியும் வகையில் அச்சிடப்பட வேண்டும். அச்சிட்டு வெளியிடுபவரின் பெயர் மற்றும் முகவரி இல்லாமல் எந்த நிறுவனமும் அச்சிடக்கூடாது என தெரிவித்தார்.

தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருக்கும் வரை உணவங்களிலிருந்து தேர்தல் தொடர்பான பணிகளுக்கு வழங்கப்படும் உணவு பொட்டலங்கள்,

கேரியர் உணவுகள் மற்றும் பிற ஆர்டர்களுக்கு வழங்கிய பட்டியல் அந்த பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு வழங்க வேண்டும்.

தேனி மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும் வரை திருமண மண்டபங்கள், தனியார் தங்கும் விடுதிகளில் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களின் கூட்டங்கள் நடைபெறும் பொழுது உரிய அனுமதி பெற்றிருக்க வேண்டும். இது குறித்த உரிய தகவலை சம்பந்தப்பட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு நிகழ்வு நடைபெறுவதற்கு முன்னதாக தகவல் தெரிவித்து உரிய அனுமதி பெற வேண்டும். ஏற்கனவே திருமண மண்டபங்களில் திருமணங்கள் மற்றும் வேறு நிகழ்ச்சிகள் குறித்த முன்பதிவு விபரங்கள் உடனடியாக சம்பந்தப்பட்ட சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் காவல்துறைக்கு அளித்திட வேண்டும்.

திருமண மண்டபம், தனியார் தங்கும் விடுதிகளில் வெளிநபர்கள் தங்கும் விபரங்களை பதிவேடுகளில் விடுதலின்றி பதிவு செய்ய வேண்டும். அரசியல் கட்சி அல்லது வேட்பாளர்களின் கூட்டங்கள் முழுவதுமாக வீடியோ கேமிராக்கள் மூலம் கண்காணிக்கப்படும். எனவே, தேர்தல் நடத்தை விதிகளை முறையாக பின்பற்றி தங்களது நிறுவனங்கள் மீது புகார்கள் எழாத வகையில் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்திட அச்சகம், உணவகம், தனியார் தங்கும் விடுதி மற்றும் தனியார் மண்டபங்களின் உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்.ஏ.எடிசன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை ராஜா முத்தையா மன்றம் அருகில் இருந்து ரோட்டரி சங்கம் மற்றும் சாக்ஸ் எம்.ஏ.வி.எம்.எம் பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள் 100% வாக்களிப்போம் என் வாக்கு என் உரிமை என விழிப்புணர்வு பதாகையுடன் கலந்து கொண்ட பேரணியை மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து 100% வாக்களிப்போம் என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்காளர் உறுதிமொழியை கல்லூரி மாணவ மாணவியர்கள் எடுத்துக் கொண்டனர்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சித்திரை திருவிழா மற்றும் அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் ஆகிய நிகழ்ச்சிகளின் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தொடர்புடைய அலுவலர்களுடன். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் மாநகர காவல் ஆணையார்முனைவர் ஜெ.லோகநாதன், இ.கா.ப., முன்னிலையில் நடைபெற்றது. மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் இ.ஆ.ப., ,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த் இ.கா.ப., , மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் மாவட்ட நிர்வாகிகளில் அவசர ஆலோசனைக்கூட்டம்

## சட்ட மன்ற தேர்தலில்உள்ளூர் நபர்களுக்கு மட்டுமே வாய்ப்பு கொடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது



கிருஷ்ணகிரி, மார்ச்.,28-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளின் அவசர ஆலோசனைக்கூட்டம் நடைப்பெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைப்பெற்ற இந்தஅவசர ஆலோசனை கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி.ரகு தலைமையில் நடைப்பெற்ற இக்கூட்டத்திற்குநகர தலைவர் லலித் ஆண்டனி முன்னிலை வகித்தார்.மேலும் இந்தக் கூட்டத்திற்கு காங்கிரஸ் கட்சியின் மாநிலசெயற்குழு உறுப்பினர் அக கிருஷ்ணமூர்த்தி, மாநில பொதுசெயலாளர் ஏகம்பவாணன், முன்னாள் மாவட்டத்தலைவர்களான எல்.சுப்பிரமணியன், ராஜா குமாரவேல், ஜேசுதுரைராஜ், நாராயண மூர்த்தி, காசிலிங்கம்,சிறுபாண்மை பிரிவு தலைவர் ஜாவித்கான், முன்னாள் எஸ்.சி.எஸ்.டி. மாநில பொதுச்செயலாளர் அறுமுக சுப்பிரமணி, அகில இந்திய கமிட்டி உறுப்பினர் குமரேசன், சேலம் மண்டல ரயில்வே குழு உறுப்பினர் தளபதி ரகமத்துல்லா ஆகியோர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்தை ஆதரித்து பேசினார்கள்.

இந்த கூட்டத்தினைத்தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, ஓசூர், தளி, வேப்பனஹள்ளி, பர்கூர், ஊத்தங்கரை ஆகிய

6 தொகுதிகளில் எந்த தொகுதியாக இருந்தாலும் சீட் வழங்குவது கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த காங்கிரஸ் கட்சியினருக்கே சீட் வழங்க வேண்டும்.வேறு மாவட்டமோ அல்லதுவேறு மாநிலத்தில் இருந்து வேட்பாளர்களை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அறிவிக்கக்ககூடாது மண்ணின் மைந்தர்யாக யாரகஇருந்தாலும் அவர்களை வெற்றிப்பெச்செய்து எதிர்க்கட்சி தலைவர்திரு. ராகுல் காந்தியின் கரத்தினை வலுப்படுத்த பாடுப்படுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த அவசர ஆலோசனைக்கூட்டத்திற்கு வட்டாரத் தலைவர்களான, நஞ்சுண்டன், தனஞ்செயயன், நாராயண மூர்த்தி, சித்திக், அயோத்தி, நகர தலைவர்கள் ஸ்ரீராம், யுவராஜ், விஜயகுமார், இளைஞர் அணி தலைவர் சத்தியமூர்த்தி, நகர்மன்ற உறுப்பினர் வினாயகம், முன்னாள் நகர தலைவர்கள் வின்சென்ட்,ரமேஷ்அர்னால்ட், டாக்டர் தகி,

மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அப்சல்,

வாஜித் பாஷா, கமலகண்ணன், குட்டி, பாண்டுரங்கன், முன்னாள் ஊத்தங்கரை சேர்மன் பூபதி, முன்னாள் அரசம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், சக்கரவர்த்தி, இளைஞர் காங்கிர ஸ் சத்திவேல, மாரியப்பன், மீனவரணி தலைவர் செல்வம், முனீர்,

உள்ளிட்ட பலர் ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.




■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை ராஜா முத்தையா மன்றம் அருகில் இருந்து ரோட்டரி சங்கம் மற்றும் சாக்ஸ் எம்.ஏ.வி.எம்.எம் பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள் 100% வாக்களிப்போம் என் வாக்கு என் உரிமை என விழிப்புணர்வு பதாகையுடன் கலந்து கொண்ட பேரணியை மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து 100% வாக்களிப்போம் என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்காளர் உறுதிமொழியை கல்லூரி மாணவ மாணவியர்கள் எடுத்துக் கொண்டனர்.

# தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் பங்குனித் திருவிழா மார்ச் 29ல் கொடியேற்றத்துடன் தொடக்கம்

## அறங்காவலர் வெங்கடேச செட்டியார் தகவல்

தாயமங்கலம், மார்ச்.27-

சிவகங்கை மாவட்டம், தாயமங்கலத்தில் உலகப் புகழ்பெற்ற அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் பங்குனிப் பெருந்திருவிழா வரும் மார்ச் 29ஆம் தேதி கோலாகலமாகத் தொடங்க உள்ளது. இது குறித்து கோயில் அறங்காவலர் வெங்கடேச செட்டியார் வெளியிட்டுள்ள விழா அட்டவணையில், 11 நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவின் முக்கிய நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன.



திருவிழா கால அட்டவணை:ஒவ்வொரு நாளும் அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்:

மார்ச் 29: கொடியேற்றத்துடன் விழா இனிதே தொடங்குகிறது.

மார்ச் 30 - 31: சிம்ம வாகனத்தில் அம்மன் வீதி உலா. ஏப்ரல் 01: குதிரை வாகனப் புறப்பாடு. ஏப்ரல் 02: காமதேனு வாகனத்தில் எழுந்தருளுதல். ஏப்ரல் 03: அன்ன வாகனப் புறப்பாடு.

ஏப்ரல் 04: பூத வாகனத்தில் அம்மன் உலா. ஏப்ரல் 05: விழாவின் முக்கிய நிகழ்வான பொங்கல் வைபவம்.

ஏப்ரல் 06: பிரம்மாண்டமான தேரோட்டம்.

ஏப்ரல் 07: பால்குடம் எடுத்தல் மற்றும் இரவு பூப்பல்லக்கு விழா. ஏப்ரல் 08: தீர்த்தவாரியுடன் விழா நிறைவு பெறுகிறது.

இந்த ஆண்டு விழாவிற்குத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக அறங்காவலர் குழு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் குடிநீர், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்ட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# வெளி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கியதால் ஆசிரியர்கள் அதிர்ச்சி!

கோவில்பட்டி, மார்ச்.,28-

கோவில்பட்டி/ தென்காசி: தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்.23ம் தேதி நடைபெற உள்ள நிலையில், கோவில்பட்டி வட்டத்துக்கு உட்பட்ட பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான முதல் கட்ட பயிற்சி முகாம் சங்கரன் கோவில் கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நாளை (28ம் தேதி) நடைபெற உள்ளது. வெளிமாவட்டங்களில் உள்ள தொகுதிகளில் பணி ஒதுக்கீடு பெற்றுள்ள ஆசிரியைகள் 3 கட்ட பயிற்சி வகுப்புகளுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு செல்ல வேண்டும்.

தொடர்ந்து ஏப்.22, 23ம் தேதி தேர்தல் பணி செய்ய வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரம் எடுத்துச் செல்லும் வரை மையத்தில் காத்திருக்க வேண்டும். நள்ளிரவு நேரம் வந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் சென்றால், அதன் பின்னர் ஆசிரியைகள் வீடு திரும்புவதில் சிக்கல் ஏற்படும். எனவே, சொந்த மாவட்டங்களிலேயே உள்ள தொகுதிகளில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து முன்னாள் ராணுவவீரர் அ.ஜெயப்பிரகாஷ் நாராயணசாமி கூறியதாவது: கடந்த நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவை தேர்தல்களில் ஆசிரியைகளுக்கு தூத்துக்குடி மாவட்ட வரம்புக் குள் தேர்தல் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு தேர்தல் பணி செய்தனர்.

தற்போது சட்டப்பேரவை தேர்தலில் பணி தென்காசி மாவட்ட வரம்புக்குள் இணைக்கப்பட்டு தேர்தல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியைகள் பயிற்சிக்காக சுமார் 40 கி.மீ. அலைய வேண்டும்.

எனவே, இதற்கு முன்பு தேர்தல் பணி ஒதுக்கீடு செய்தபடியே இந்தாண்டும் தூத்துக்குடி மாவட்ட வரம்புக்குள் தேர்தல் பணி வழங்க உரிய ஆவண செய்ய வேண்டும். தென்காசி மாவட்டத்தில் வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு பள்ளி தலைமை ஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஆனால், இந்த தேர்தலில் தென்காசி மாவட்டத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், அரசு அலுவலக எழுத்தர்கள் உள்ளிட்டோருக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை தென்காசி மாவட்ட தேர்தல் அதிகாரி விசாரித்து பணி ஒதுக்கீட்டை வரைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

இதற்கிடையே, இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மா.கலை உடையார் தூத்துக்குடி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில்,, ''பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி ஆட்சியரால் தேர்தல் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டம் விட்டு மாவட்டம் தேர்தல் பணி யாற்றும் இந்த நிலை பள்ளி ஆசிரியர்களிடையே மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்துக்குள் தேர்தல் பணியாணை வழங்க வேண்டும், என தெரிவித்துள்ளார்.

# தாராபுரம்:காசிக்கு இணையான அருள் நிலையம்: குண்டடம் காலபைரவர் கோவிலில் கும்பாபிஷேக விழா 8000திற்கு மேற்பட்ட பக்தர்கள் கோபுர தரிசனம் செய்தனர்

திருப்பூர், மார்ச்.,28-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே உள்ள குண்டடம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு கொங்கு வடுகநாதர் (காலபைரவர்) திருக்கோவில், தமிழகத்தின் முக்கிய ஆன்மிகத் தலங்களில் ஒன்றாக திகழ்கிறது. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமையான கோவிலாக கருதப்படும் இத்தலம், காசியில் உள்ள காசி காலபைரவரின் சக்தி இங்கும் நிலை கொண்டுள்ளது என்ற ஆழ்ந்த நம்பிக்கையால் பக்தர்களிடையே சிறப்பிடம் பெற்றுள்ளது.

“காசு இருந்தால் காசிக்கு செல்லுங்கள், காசு இல்லாவிட்டால் குண்டடத்துக்கு வாருங்கள்” என்ற திரு முருக கிருபானந்த வாரியார் அவர்களின் புகழ்பெற்ற வரிகள், இத்தலத்தின் பெருமையை எளிமையாக எடுத்துரைக்கின்றன. காசியில் உள்ள காலபைரவரே சிவபெருமானின் ஆணையின்படி குண்டடத்திலும் அருள்பாலிக்கிறார் என்ற நம்பிக்கையால், பலரும் இத்தலத்தை தரிசிக்க வருகின்றனர்.

இந்நிலையில், மார்ச் 25 புதன்கிழமை அன்று இக்கோவிலில் திருக்குட





நன்னீராட்டு பெருவிழா (கும்பாபிஷேகம்) சிறப்பாக நடைபெற்றது. காலை யாகசாலை பூஜையுடன் தொடங்கிய விழா, தொடர்ந்து வேத மந்திரங்களின் ஒலியுடன் மிக விமரிசையாக நடைபெற்றது.

பின்னர் கன்னிமூல கணபதி, சௌந்தர நாயகி, அமிர்தகடேஸ்வரர், பாலமுருகன், வள்ளி தெய்வானை, பூமாதேவி, ஸ்ரீதேவி, கலிவரதராஜர் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஒரே நேரத்தில் நன்னீராட்டு குடமுழுக்கு நடைபெற்றது. கர்நாடகா, கேரளா, ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்தும், கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர், மதுரை போன்ற பகுதிகளிலிருந்தும் சுமார் 8,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர்.

14 வகை பொருட்களுடன் காலபைரவர் ஆராதனை

இந்த கும்பாபிஷேக விழாவில் காலபைரவருக்கு சிறப்பு ஆராதனைகள் நடத்தப்பட்டன. வழிபாட்டின் ஒரு பகுதியாக 14 வகையான பொருட்கள் சமர்ப்பித்து பூஜை செய்யப்பட்டது. அவை:

மிளகு, வெல்லம், தேங்காய், வாழைப்பழம், எலுமிச்சை, தயிர், பால், தேன், சந்தனம், குங்குமம், விபூதி, கருப்பு எள், நெய், தண்ணீர் ஆகியவை ஆகும்.

இந்த பொருட்களால் அபிஷேகம் செய்து, நைவேத்தியம் வைத்து பக்தர்கள் ஆராதனை செய்தனர். இதனால் பாப நிவிர்த்தி, பயநிவாரணம், தடைகள் நீக்கம் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

குடமுழுக்கு விழாவில் ஐந்து மோட்டார் மூலம் புனித தீர்த்த நீர் பக்தர்கள் மேல் பீச்சி அடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பழமையான வரலாறு ஸ்ரீ மிளகு நைவேத்தியத்தின் சிறப்பு

கோவிலின் வரலாறு குறித்து சண்முகசுந்தரம் சிவாச்சாரியார் தெரிவித்ததாவது:

சேர நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்குச் செல்லும் வணிகர்கள் குண்டடத்தில் தங்கி செல்வது வழக்கம். ஒருமுறை மிளகு மூட்டைகளுடன் சென்ற வணிகர், ஒரு முதியவரிடம் உண்மையை மறைத்து பொய் கூறியதால், அவரது மிளகு மூட்டைகள் அனைத்தும் பயறுகளாக மாறியதாக கூறப்படுகிறது.

தன் தவறை உணர்ந்த வணிகர் வடுகநாதரை வேண்டி பிரார்த்தனை செய்தபோது, மன்னனின் கனவில் தோன்றிய இறைவன், வணிகரை மன்னிக்குமாறு கூறியதுடன், மன்னனின் பிள்ளைகளின் நோய்களையும் குணப்படுத்தினார். இதனால் நம்பிக்கை பெற்ற மன்னன், புதைந்திருந்த கோவிலை மீண்டும் கண்டெடுத்து விரிவாக கட்டியதுடன், நிலங்களையும் வழங்கினார்.

இதன் பின்னர், மிளகை நைவேத்தியமாக வைத்து வழிபட்டால் அனைத்து நலன்களும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உருவானது. மேலும் காலபைரவரை வழிபட்டால் பயம் நீங்கி, வாழ்க்கை தடைகள் அகலும், நோய்கள் குணமாகும் என்ற பக்தி நம்பிக்கை இன்றளவும் நிலைத்து வருகிறது.

தேய்பிறை அஷ்டமி தினங்களில் காலபைரவருக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்று, சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபடுவது இத்தலத்தின் இன்னொரு சிறப்பாகும்.

# “நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் தரமாட்டேன்”

## சீமான் பேச்சு

சென்னை, மார்ச்.,28-

“நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் நான் தரமாட்டேன். அதையெல்லாம் நீங்களே வாங்கிக்கொள்ளும்படி வேலையை தருகிறேன்” என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கள்ளக்குறிச்சியில் பேசும்போது, “வலிமை மிக்க ஆயுதம் வாக்கு; ஒற்றை வாக்கை உலகம் திரும்பிப் பார்க்க வைக்கும் வாக்காக மாற்ற முடியும். கருணாநிதி, ஜெயலலிதா, ஸ்டாலின், பழனிசாமி ஆட்சியை பார்த்துவிட்டீர்கள்; ஒருமுறை ஆட்சியை என்னிடம் தாருங்கள். நல்ல கல்வி, உலகத் தரம் வாய்ந்த மருத்துவம், தூய குடிநீரை இலவசமாக தருகிறேன்.




நான் ஆட்சிக்கு வந்த பிறகு மதுக்கடைகளை மூட முடியும், பாலியல் வன்கொடுமைகளை தடுத்திட முடியும், நீரை தேக்கி வைக்க முடியும். ஆனால் மறுபடியும் என்னால் மலைகளை, ஆற்று மணலை உருவாக்க முடியாது, ஏனென்றால் அது இயற்கையின் கொடை.

நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் நான் தரமாட்டேன். அதையெல்லாம் நீங்களே வாங்கிக்கொள்ளும்படி வேலையை தருகிறேன். அதற்கு சம்பளம் தருகிறேன். யார் கையையும் எதிர்பார்க்காமல் தன்மானத்தோடு வாழக்கூடிய தற்சார்பு வாழ்க்கையை உங்கள் பிள்ளையாகிய நான் தருவேன்.

இன்று ஒரு தொகுதிக்கு ரூ. 25 கோடி கொடுத்து, ஒருவருக்கு ரூ. 2000 கொடுக்கிறவன் தான் வேட்பாளர். அப்படி என்றால் ரூ.25 கோடி முதலீடு செய்கிறவன் லாபத் தேவைக்கு செய்கிறானா? மக்கள் சேவைக்கு செய்கிறானா? உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறவன், எப்படி உங்களுக்கு சேவை செய்வான் என்று எப்படி நம்புகிறீர்கள்? . கொஞ்சம் சிந்தித்து வாக்களியுங்கள்.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# ஆப்கன் பாகிஸ்தான் எல்லையில் மீண்டும் மோதல்

காபூல், மார்ச்., 28-

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் தற்காலிக போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித்துள்ளது. ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு ஆப்கன் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு தரப்பினரும் அறிவித்திருந்த குறுகிய காலப் போர் நிறுத்தம் கடந்த புதன்கிழமையுடன் முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானின் குனர் மாகாணத்தில் உள்ள நராய் மற்றும் சர்கானோ மாவட்டங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் பீரங்கி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக அந்த மாகாணத்தின் செய்தி மற்றும் கலாச்சாரத் துறை இயக்குநர் ஜியாவுர் ரஹ்மான் ஸ்பீன்கர் தெரிவித்தார்.

இருவர் உயிரிழப்பு இதுகுறித்து அவர் கூறுகையில், “பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் இருவர் உயிரிழந்ததோடு, 8 பேர் காயமடைந்தனர். பாகிஸ்தானின் இந்த தாக்குதலுக்கு ஆப்கன் எல்லைப் பாதுகாப்புப் படையினரும் தகுந்த பதிலடி கொடுத்தனர். இதில் பாகிஸ்தானின் மூன்று ராணுவச் சாவடிகள் அழிக்கப்பட்டதுடன், ஒருவர் கொல்லப்பட்டார்” என்றார்.

இருப்பினும், இதுகுறித்து பாகிஸ்தான் ராணுவம் தரப்பில் உடனடியாக விளக்கம் அளிக்கப்படவில்லை. அதே வேளையில், ஆப்கன் படைகளே முதலில் தாக்குதலை ஆரம்பித்ததாக பாகிஸ்தான் தரப்பு அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்

# ராமநாதபுரம் தொகுதியை தொடர்ந்து பாஜகவுக்கு ஒதுக்குவதால் அதிமுகவினர் ஏமாற்றம்!

ராமநாதபுரம், மார்ச்., 28-

ராமநாதபுரம் சட்டப்பேரவை தொகுதியை தொடர்ந்து பாஜகவுக்கு ஒதுக்குவதால், அதிமுகவினர் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி (தனி), திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர் ஆகிய 4 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. இதில் தேசிய ஜனநாயக கூட்டணியில் பரமக்குடி, திருவாடானை, முதுகுளத்தூர் ஆகிய தொகுதி களில் அதிமுக போட்டியிட உள்ளது. ராமநாதபுரம்




தொகுதி பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் சட்டப்பேரவை தொகுதியில் இதுவரை நடந்த தேர்தல்களில் அதிமுக 6 முறை வென்று முதலிடத்தில் உள்ளது. 1952 முதல் 2021 வரை 16 முறை நடந்த சட்டப்பேரவை தேர்தல்களில் 1977, 1980, 1984, 1991, 2001, 2016 என அதிமுக 6 முறை வெற்றி பெற்றுள்ளது.

திமுக 5 முறையும், காங்கிரஸ் 3 முறை, மனிதநேய மக்கள் கட்சி, சுயேச்சை தலா ஒரு முறையும் வென்றுள்ளன. கடந்த 2021 தேர்தலில் திமுக வேட்பாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கமும், 2016ல் அதிமுகவின் எம்.மணிகண்டனும் வெற்றி பெற்றனர்.

தற்போது பாஜகவுக்கு ஒதுக்கப்பட்டது குறித்து அதிமுகவினர் கூறுகையில், ‘ராமநாதபுரம் தொகுதியில் வெற்றி பெறும் கட்சியே தமிழகத்தில் ஆட்சியில் அமரும் என்ற அரசியல் சென்டிமென்ட் தொடர்ந்து வருகிறது.

ராமநாதபுரம் அதிமுக கோட்டையாக இருந்தபோதும், கடந்த 2021 தேர்தல், தற்போதைய தேர்தலில் கூட்டணிக் கட்சியான பாஜகவுக்கு ஒதுக்கியதால் அதிமுகவினர் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். திமுகவை தோற்கடிக்க வேண்டும் என்றால் அதிமுக நேரடியாக போட்டியிட வேண்டும்.

அதற்கேற்ற அதிமுக வேட்பாளரை கட்சித் தலைமை நிறுத்தி வெற்றிபெறச் செய்ய முயற்சித்திருக்க வேண்டும். தொகுதி கிடைக்காதது ஏமாற்றமே என்றாலும், கூட்டணி தர்மம் கருதி தேர்தல் பணியாற்றுவோம்’ என்றனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161